# நோய் கட்டுப்பாட்டில் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ்

சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் மண்ணின் மூலம் பரவும் நோய்களான வாடல் நோய், நாற்றழுகல் நோய் போன்றவற்றை கட்டுப்படுத்துவதுடன் இலைவழி மூலம் பரவும் பூசண நோய்களான குலை நோய், இலையுறை கருகல் நோய், இலைப்புள்ளி நோய் ஆகியவற்றின் பாதிப்பையும் குறைக்கின்றது.

மேலும் இந்த வகை பாக்டீரியம் நோய்கள் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஹார்மோன்களான ஆக்ஸிஜன், ஜிப்ரலின் மற்றும் இன்டொல் அசிடிக் அமிலம் ஆகியவற்றை சுரந்து பயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கனிறது.

## பயன்படுத்தும் முறைகள்

### நெல்

### விதை நேர்த்தி

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் கலவை என்ற விகிதத்தில் கலந்து தேவையான அளவு தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைத்து பின்னர் தண்ணீரை வடிக்க வேண்டும். வடித்த தண்ணீரை நாற்றங்காலில் ஊற்றி விடவும்.

### நாற்று நனைத்தல்

சூடோமோனாஸ் பாக்டீரியா கலவை 2.5 கிலோவை 25 சதுர மிட்டர் நாற்றங்காலில் உள்ள தண்ணீரில் கலந்து பின்னர் ஒரு எக்டருக்கு தேவையான நாற்றுக்களை குறைந்தது அரை மணி நேரம் ஊற வைத்து நட வேண்டும்.

### வயலில் இடுதல்

நாற்று நட்ட 30 நாட்கள் கழித்து ஒரு எக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை 50 கிலோ நன்கு மக்கிய சாண எரு அல்லது மணலுடன் கலந்து இடவேண்டும்.

### தெளிப்பு முறை

சூடோமோனாஸ் பாக்டீரியா கலவை 0.5 சத கரைசலை நடவுக்கு பின்னர் 45 நாட்கள் கழிந்து நோய்களின் தீவிரத்தை பொறுத்து 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும்.

### கேழ்வரகு

குலை நோயை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் பாக்டீரியா கலவை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து விதைக்கவும்.

## நிலக்கடலை, பருத்தி மற்றும் பயறு வகைப் பயிர்கள்

### விதைநேர்த்தி

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் பாக்டீரியா கலவை என்ற விகிதத்தில் நன்கு கலந்து பின்னர் விதைக்கவும்.

### வயலில் இடுதல்

ஒரு எக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை 50 கிலோ நன்கு மக்கிய சாண எரு அல்லது மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன் நிலத்தில் இட வேண்டும்.

## காய்கறி பயிர்கள்

### நாற்றழுகல் மற்றம் நாற்று கருகல்

காய்கறி பயிர்களான தக்காளி, கத்தரி, மிளகாய், பாகற்காய் மற்றும் பூசணி பயிர்களில் தோன்றும் நாற்றழுகல் மற்றும் நாற்று கருகல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை கலந்து பின்னர் விதைக்க வேண்டும்.

### வேரழுகல் மற்றும் வாடல் நோய்

ஒரு எக்டருக்கு 2.5 கிலோ சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை 50 கிலோ நன்கு மக்கிய சாண எரு அல்லது மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன் நிலத்தில் இடவேண்டும்.

### பயன்கள்

- இது பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கச் செய்கிறது
- விதை மற்றும் மண் மூலம் பரவும் பூசணத்தை கட்டுப்படுத்துகிறது
- பயிர்களில் நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கச் செய்கிறது
- இது இதர உயிரினங்களுக்கும் தோட்டத்தில் உள்ள மண்புழுக்களுக்கும் தீமை விளைவிப்பதில்லை.